# 31

## கூகை

இது கூகம் என்ற வடசொல்லின் சிதைவென்று கூறி வருகின்றனர் வடவர். இது பொருந்தாப் புளுகாகும். கூகூ என்று கத்தலால் கூகை என்றும், கூகம் என்றும் சொல்லப்படும். தூய தமிழ்க்காரணப் பெயர். இதுபோலவே கா கா என்று கத்தலால் காகா, காக்கா, காக்கை, காகம் என்றெல்லாம் காரணப் பெயராக வழங்குவதையும் நோக்க வேண்டும்.

## பேது

இது பேதம் என்ற வடசொற் சிதைவென்று வை.மு.கோ. கம்பராமாயண உரையில் கூறியுள்ளார். பேதைமை என்பதன் அடியாக அமைந்த பெயர்ச்சொல் வேற்றுமையைக் குறிக்கும் போதும் என்க. இது பேதை என்றும் பேதைமை உடைய ஐம்பாற் பொருளையும் குறிக்கவரும். வடமொழியில் பேதம் என்பது தமிழினின்று அவர்கள் எடுத்துக் கொண்டதேயாகும்.

## மாணவன்

மாண் பெருமை. அகரச் சாரியையும் அன் ஆண்பால் இறுதி நிலையும் பெற்று மாணவன் ஆயிற்று. இதுவே மாணாக்கன் என்றும் மாண்+ஆக்கு+அன் பெருமையை உண்டாக்கிக் கொள்ளுபவன் என்று விரித்தும் பொருள் கொள்க. மாணவகன் என்றது வடசொல் என்றும், அதன் சிதைவுதான் மாணவன் என்றும் தமுக்கடிக்கின்றதாம் ஆக்காஷ்வாணிக் கூட்டம்.

- *குயில்*, **30.12.1958**

## 32

### தறை

இது தரா என்ற வடசொல்லின் சிதைவாம். இவ்வாறு வை.மு.கோ. சடாயு உயிர் நீத்த படலம் 73-ம் செய்யுள் உரையில் கூறினார். இதில் வியக்கத்தக்கது, தரா என்பதை வடசொல் என்று இயம்பியதேயாகும். தரை என்பது தருதல் (ஈனுதல்) என்று பொருள்படும் தொழிற் பெயர். தா என்ற முதனிலை தரு என வேறுபாடுற்றது. வா என்ற முதனிலை வரு என வேறுபாடுற்றதுபோல. தரு என்ற முதனிலை ஐ என்ற தொழிற் பெயர் இறுதிநிலை பெற்றுத் தரை ஆயிற்று. தருதல் என்பது தல் இறுதிநிலை பெற்றது.

தரை உயிர்த் தொகுதியை ஈனுவது தருவது ஆகிய நிலத்துக்கு ஆனது - தொழிலாகுபெயர்.

எனவே தரை தூய தமிழ்க் காரணப் பெயர். தறை என்ற சொல்லுக்கும் தரை என்ற சொல்லுக்கும் தொடர்பே இல்லை. தறை (தறு+ஐ) உறுதி பெறுதல் என்ற பொருளுடைய தொழிற் பெயரே. அத்தொழில் பொருளுக்காவதால் தறை தொழிலாகுபெயர் என அறிதல் வேண்டும்.

தரை என்ற தமிழ்ச் சொல்லையே வடவர் தரா என்று திரித்தார்.

### மனிதர்

இது மனுஷ்யர் என்பதன் திரிபாம். மனு என்பவரின் வழிவந்த காரணத்தால் அப் பெயர் வந்ததாம் எனப் பலவாறு கூறி இடர்ப்படுவார். மனு தோன்றுவதற்கு முன்னும் மன், மன்னுதல், மனம், மானம் என்று வேரும் வினையும் இருந்தன என்று தோன்றுகின்றது. ஆரியமறை தோன்றுமுன், மனு என்ற சொல்லே இல்லை என்பதால், தமிழின் மன் என்பதை வைத்தே மனுச்சொல் ஆக்கப்பெற்றது எனல் வேண்டும்.

மனிதன், மனுசன், மானுயன், மானிடன், மனித்தன் அனைத்தும் மன் என்பதன் அடியாகப் பிறந்தனவேயாகும்.

மன் என்பதற்கு, நிலைதல், உயர்வு என்பன பொருள். மனிதன் மற்ற விலங்கு பறவை முதலியவற்றினும் உயர்வுடையவன் என்பதன் காரணத்தால், மனிதன் எனப்பட்டான்.

மன் முதனிலை, 'இ' சாரியை. 'த்' எழுத்துபேறு. 'அன்' ஆண்பாற் பெயர் இறுதி நிலை என்பது உறுப்பிலக்கணம்.

- **குயில், 6.1.1959**

# 33

## விருத்தம்

இதையும் வடமொழி என்றே பேசியும் எழுதியும் ஏமாற்றி வருகின்றார்கள் வடசொற்காரர்கள்.

புதுமை என்ற பொருளுடைய விருந்து விருத்து என இடை ந், த் என வலிந்து, அம் சாரியை பெற்று விருத்தம் ஆயிற்று.

சங்க காலத்தில் விருத்தம் இருந்ததில்லை. அதன்பின் புதிதாக வந்ததால் விருத்தம் எனப்பட்டது.

எனவே விருத்தம் தூய தமிழ்க் காரணப் பெயர் என்க.

## தூது

இது வடசொல்லா என்று கேட்டு அஞ்சல் எழுதியுள்ளார் ஒரு தமிழத் தோழர்.

தூவல், தூதல், தூது இவையனைத்தும் 'தூ' என்ற முதனிலை யுடைய தொழிற் பெயர்களே. முறையே இவற்றில் உள்ள அல், தல், து ஆகியவை தொழிற் பெயற் இறுதி நிலைகளே!

தூது எனில் பொருள்? ஒருபாற் கருத்தை மற்றொரு பால், சென்று தூவுவது என்பதே.

இது ஆண்பால் இறுதிநிலை பெற்றுத் தூதன், தூதுவன் என வரும். அம்சாரியைப் பெற்றுத் தூதம் எனவும் வருவதுண்டு. தூதி பெண் பால். எனவே தூது தூய தமிழ்க் காரணப் பெயர்.

## சுவர்க்கம்

இது துறக்கம் என்ற தூய தமிழ்க் காரணப் பெயர்ச் சொல்லின் சிதைவு. அவ்வாறு வடவர் சிதைத்து எடுத்தாண்டார்கள் நம் பழந்தமிழ் இலக்கியத்தினின்று.

துறக்கம் - விட்டநிலை, உள்ளத்தின் நிலை.

**"ஈதல்அறம் தீவினைவிட்டு ஈட்டல் பொருள் எஞ்ஞான்றும்**
**காதல் இருவர் கருத்துஒருமித்து - ஆதரவு**
**பட்டதே இன்பம் பரனைநினைந்து இம்மூன்றும்**
**விட்டதே பேரின்ப வீடு."**

என்ற நம் ஔவை மூதாட்டியார் அருளிய செய்யுட் பொருளை உற்றுக் காண்க. குடும்பத் தொல்லையைத் துறந்த உள்ளப் பாங்கே துறக்கம் என்றான் தமிழன். இந்திரன் முதலியவர்க்குக் கள்ளையும், ஆட்டையும், மாட்டையும் கொடுத்துப் பெறுவதோர் மேலுலகம் என்றும் அதைச் செத்தபிறகே அடைய முடியும் என்றும் கூறும் ஆரியர் புரட்டை ஒத்துக் கொள்ளாதவன் தமிழன்.

இன்னும் அறிய வேண்டுவது, அதாவது நினைவில் வைக்க வேண்டியது, தமிழன் இந் நாட்டில் என்றும் உள்ளவன். அவன் அன்றே நன்கு வாழ்ந்தவன். ஆரியன் தமிழினிடத்தினின்றே பிச்சை எடுத்திருக்க வேண்டும்.

ஏன் இதை இவ்வளவாய் விரித்தோம் எனின், கம்பராமா யணத்திற்குப் பொருள் கூற வந்த ஒரு பார்ப்பனப் பேதை, துறக்கம் சுவர்க்கம் என்ற வடசொல்லின் சிதைவு என்றான். பொந்து தேடி ஓடிவந்த ஆரியக் குரங்கு பொன்னாடை கட்டி வந்தது என்பதை நிகர்க்கும் இது.

**- *குயில்*, 27.1.1959**

## 34

## தேவர்

இது வடசொல் அன்று. தெவ்வுப் பகையாகும் என்ற (தொல். உரி.349 ) செய்யுளால் தெவ் என்பது பகை என்ற பொருளுடையது என்பதை அறிந்து கொள்க. தெவ் என்பது முதனீண்டு அர் இறுதிநிலை பெற்றது. எனவே தேவர் எனில் பகைவர் என்பதே பொருள். தெவ் என்பதே தே என்றும் தேவு என்றும் வருவதுண்டு. தேவன் என்பது ஆண்பால் ஒருமை, இதன் பெண்பாலே தேவி என்க. தேவி என்பது கூட வடமொழியென்றே ஏமாற்றுவர். தே என்பதும் அப்படித்தானாம்! தேவு என்பதும் அப்படித்தானாம்.

தேவன் பகைவனா - தேவர் பகைவரா என்ற வினாவுக்கு விடை காண்போம்.

அறிவு நிரம்பாத நாளில் மழையையும், வெயிலையும், காட்டாற்றையும், காட்டுக் கனலையும் தெவ் என்றும் தெய் என்றும் பெயரிட்டு அழைத்தான் தமிழன். அறிவு பெற்ற நிலையில் அவற்றின் அருமை தெரிந்து அவற்றை வாழ்த்தலானான். தெய் என்றும் தெவ் என்றும் கூறி வெறுத்த செங்கதிரையும் திங்களையும் செங்கதிர் போற்றுதும், திங்களைப் போற்றுதும் என்றெல்லாம் கூறியது கேட்டோ மன்றோ.

தெவ் என்பதன் அடியாகப் பிறந்த தேவன், தேவர், தே, தேவு என்பன கண்ணையும் மனத்தையும் கவர்வனவற்றையும் பயன்படு பொருள்களையும் குறிப்பனவே என அறிக. எனவே இவை தூய தமிழ்க் காரணப் பெயர்கள்.

- குயில், 3.2.1959

## 35

## அவி

அவிதல், அவியல் என்பனவற்றின் முதனிலைத் தொழிற் பெயரே அவி என்பது. வேவுதல் என்பது அதன் பொருள்.

இனி, அவி என்றது தொழிலாகுபெயரால். வேவுதல் உடைய ஒரு பொருளைக் குறித்தது. அந்த வேவற் பொருள் ஏது? தேவர் உணவு என்று மழுப்பற் பொருள் கூறிக் கொண்டிருக்கின்றனர் ஆரியச் சார்பினர். ஆடுமாடுகளின் ஊன் என்றும் அவற்றின் நிணம் என்றும் வெளிப்படையாகவா கூறுவார்கள்?

"அவி சொரிந்து ஆயிரம் வேட்டலின் ஒன்றன் உயிர் செகுத்து உண்ணாமை நன்று", என்ற குறட்பாவுக்குப் பொருள் கூற வந்த பரிமேலழகர், அவி என்பதற்கு நெய் முதலியவைகள் என்று கூறி மழுப்புகின்றார். கொலை வேள்வியும், தம் இனத்தார்க்கு உள்ள புலால் வெறியும் பரிமேலழகர்க்கே நாணத்தை உண்டாக்குகின்றன. வெளிப்படை பொருளை அவரிடம் எப்படி எதிர்பார்க்க முடியும்!

கா. சுப்பரமணியனார் (எம்.எல்.பிள்ளை) திருக்குறள் - பொழிப் புரையுள் அவி என்பதற்கு ஊன் என்றே பொருள் கூறியருளியுள்ளார்.

ஆட்டைப் பல பார்ப்பனர் அமிழ்த்திப் பிடித்துக் கொள்வார்கள். அதன் விதையைப் பிசைந்து உயிர் போக்குவார்கள். மற்றும் சில கொலைகாரப் பார்ப்பன பசங்கள் எதிரில் உள்ள தீயில் அதை எடுத்துப் போடுவார்கள். அந்த ஆட்டின் நிணமே - கொழுப்பே அத்தீயை மூண்டெழச் செய்கின்றது. அந்த நிணத்திலேயே அந்த ஆட்டுடல் வேகுகின்றது. இந்தத் திருப்பணியில் பெரிதாக எண்ணப்படுவன இவ் விரண்டுமே! ஒன்று தீ எரியச் செய்கின்றது நிணம். கறியை வேகச் செய்கின்றது நிணம் என்பது மற்றொன்று. இவைகளைக் கருதித்தான் அவி "சொரிந்து" என்றார் வள்ளுவர்.

இனி, அவி என்ற சொல்லை வடமொழி நூற்களிற் கண்ட சில தமிழ் விபூடணர், இது வடமொழிச் சிதைவென்று கூறி மானமிழப்பர். தமிழ் நூலில் தமிழ்நாட்டில் அவி எனக் காணும் தமிழர் தமிழிலக் கணத்தால் - தமிழ் மனத்தால் அச் சொல்லை நோக்க வேண்டுமே யன்றி ஆரிய மனத்தினின்று நோக்குவது என்ன காலக்கோளாறோ நாம் அறியோம். எனவே, அவி தூய தமிழ்க் காரணப்பெயர் எனக் கடைபிடிக்க.

- *குயில்*, **17.2.1959**

## 36

### நாகம்

இது வடமொழியல்லவா? - இவ்வாறு தனி முறையில் கேட்கின்றார் ஓர் வடமொழி அன்பர். அதே நேரத்தில் அவர், தனி முறையில் கேட்கின்றேன். தனி முறையில் பதில் எழுதுங்கள். குயில் வாயிலாய்ப் பதில் தருவதாயிருந்தால் என் பெயரைக் குறிக்க வேண்டாம். என்றும் கூறுகின்றார். இவ்வளவு கட்டுப்பாடுகளை நமக்கு ஏற்படுத்துகின்றார்! காரணம் நண்பரின் தலைக்கொழுப்பேயாகும்.

நகு என்றதன் அடியாகத் தோன்றியது நாகம்: நகுதல் என்பதற்கு மகிழ்ச்சி, ஒளி சிறப்பு என்பன பொருளாகும்.

நகு என்பதன் அடியாகப் பிறந்த நாகம் என்ற சொல்லுக்கு நாளடைவில் விண், குரங்கு, புன்னை, தூசு, மலை, பாம்பு, யானை என்பன அனைத்தும் பொருளாயின.

ஏன்? - இங்குக் கூறிய விண் முதலிய அனைத்தும் மகிழ்ச்சியை யும் ஒளியையும் சிறப்பையும் தரத்தக்கன ஆதலால்,

நகு முதல் நீண்டு நாகு என்றாயது இலக்கணப்படி! நாகு என்பது அம் சாரியை பெற்றது இலக்கணப்படியே.

வடமொழி இலக்கியத்தில் நாகம் வருகின்றதே என்று கேட்பர் சில அறிவிலிகள், வந்தாலென்ன! தமிழ்ச் சொல்லைத் திருடாதவர்களா வடவர்? வடமொழி இலக்கியம் என்பதாக - தனித்தன்மையோடு - கலப்பில்லாமல் ஒன்று வாழ்கின்றதோ வடவருக்கு?

நாகம் தூய தமிழ்க் காரணப் பெயர் என்பதை மீண்டும் வலியுறுத்தினோம்.

**- குயில், 24.2.1959**

## 37

## பலி

வாய் என்பதன் அடியாகப் பிறந்த வாய்மை போலவும், மெய் என்பதன் அடியாகப் பிறந்த மெய்ம்மை போலவும், உன் என்பதன் அடியாகப் பிறந்த உண்மை போலவும், கண் என்பதன் அடியாகப் பிறந்த கணம் போலவும், பல் என்பதன் அடியாகப் பிறந்தது பலி என்று அறிக. பலி- பல்லினால் வலிந்து உண்ணத் தகும் உணவுக்கும் நாளடைவில் பல்வகை உணவுப் படையலுக்கும் வழங்கிற்று.

முதலில் விலங்கு முதலியவற்றை மூடவழக்கத்தால் தெய்வப் படிவங்களின் முன்வைத்து வெட்டிக் கொலை புரிந்தார்கள். அதைத் தெய்வங்களே நேரில் பல்லினால் கடித்து உண்டதாகச் சிறப்புறுத்தி னார்கள்.

பின்னர் நாகரிகமிக்க தமிழர்களின் வெறுப்புக்கு அஞ்சி, தெய்வத்திற்குத் தருவன எவற்றையும் பலி என்ற பெயராலேயே கூறத் தொடங்கினர் ஆரியப்பாவிகள். எனவே, பலி தூய தமிழ் காரணப் பெயர் என்று கடைபிடிக்க!

- குயில், 3.3.1959

## 38

### தாமரை

இது தாமரசம் என்ற வடசொல்லின் சிதைவென்று ஏதுங் கெட்ட வடமொழியாளர் இயம்பி மகிழ்வர்.

மரு என்றால் தமிழில் மணத்திற்குப் பெயர். அது ஐ என்ற பெயர் இறுதி நிலையை முற்று அற்று ஒரோ வழி என்ற இலக்கணத்தால் மரையாயிற்று. மரை மணமுடையது. அதாவது மலர்.

அது இனம் விலக்க தாம் என்பதைப் பெற்றுத் தாமரை என வழங்கும் மரை என்றே வழங்குவதும் உண்டு. தாம் என்பதன் பொருள் என் எனில் அஃது தாவும் என்பதன் ஈற்றுயிர் மெய் கெட்ட பெயரெச்சம். கொடி நீண்டது அன்றோ தாமரை! கொடி நீட்சியால் அயலிடம் தாவுகின்ற பூ; எனவே தாமரை.

தாமரை தூய தமிழ்க் காரணப் பெயர். இதைத் தாமரசம் என எடுத்தாண்டனர் வடவர் என அறிதல் வேண்டும்.

### வாவி

இது வாபீ என்ற வடசொல் என்று கதைப்பார். ஏமாறுகின்றவர் இருக்கும் வரை ஏமாற்றுகின்றவர் இருப்பர்.

வாவுதல் - பரவுதல்; தேங்குதல் என்க. வாவுதலையுடையது வாவி.

எனவே வாவி தூய தமிழ்க் காரணப்பெயர் எனக் கடைப்பிடிக்க.

### துளசி

இது துழாய் என்ற தூய தமிழ்ச் சொல்லின் சிதைவு. இவ்வாறு சிதைத்து எடுத்தாண்டனர் வடவர்.

இந்தத் திருட்டு அவர்களிடம் நிலைத்து விடவே, இன்று துழாய் என்பதே துளசியினின்று வந்தது என்கின்றனர். துழாய் இருக்க, அவர்களால் ஒலி மாற்றம் செய்யப்பட்ட துளசி என்ற சொல்லை நாம் எடுத்தாள வேண்டாம்.

துழா - பரவுதல். மணம் பரவுதல் என்க.

ய். பெயர் இறுதிநிலை.

**- குயில், 10.3.1959**

## 39

## இலட்சம்

இது இலக்கம் என்ற தூய தமிழ்ச் சொற் சிதைவு. ஒன்றினும் ஒளியுடையது பத்து: பத்தினும் ஒளியுடையது ஆயிரம். ஆயிரத்தினும் ஒளியுடையது பத்தாயிரம்; பத்தாயிரத்தினும் ஒளியுடையது நூறாயிரம். ஒளி – புகழ்; கவர்ச்சி அடையத்தக்கது.

எல்லே இலக்கம் ஏன்பது தொல்காப்பியம். இலக்கம் என்பது அம் சாரியையின்றி இலக்கு என நிற்பதும் உண்டு.

லட்சம் என்ற வடசொல்லினின்று இலக்கம் வந்தது என்று ஏமாற்றுவார் சொற்கள் கான்றுமிழத்தக்கவை.

தமிழன் வடசொற்காரர் சிதைத்தபடி, லட்சம் என்றோ இலட்சம் என்றோ எழுதாமல், இலக்கம் என்ற சிதையா தூய தமிழ்க் காரணப் பெயரையே எழுதுக. பேசுக.

## கோடி

இதையும் வடசொற்காரர் வடசொல் என்று கூறிப் பிழைப்பர். எண்ணின் உச்சி என்பது பொருள். ஆதலின் கோடி. (நூறு இலக்கம்) தூய தமிழ்க் காரணப் பெயரே என்று கடைப் பிடிக்க.

**- *குயில்*, 17.3.1959**

## 40

### மலம்

இது வடசொல் அன்று. மலமல என்பது ஒலிக்குறிப்பு. மலம் கழித்தற் காலத்தில் ஏற்படுவதன்றோ. மலமல என்பதன் அடியாகப் பிறந்த தூய தமிழ்க் காரணப்பெயரே மலம் என்பது. சலசல என்ற ஒலிக்குறிப்புச் சொல்லினடியாகச் சலம் தோன்றியதும் இங்கு ஒப்பு நோக்கத் தக்கது. இதை வந்தவர் எடுத்தாண்டனர்.

### ஆயுள்

இது ஆயுசு என்ற வடசொல்லின் சிதைவென்று சொல்லி ஏமாற்றி வருகின்றனர் வடவர். அவ்வாறே ஏமாந்து கிடக்கின்றனர் தமிழர்.

ஆயுள் என்பது ஆவுள் என்பதன் மரூஉ. ஆவுள் - உள் என்னும் தொழிற் பெயர் இறுதி நிலை பெற்ற ஆதல் என்னும் பொருட்டாய தொழிற் பெயரேயாகும். இதை வந்தவர் எடுத்தாண்டனர்.

வாழ் நாள் ஆய்க்கொண்டே - கழிந்து கொண்டே போவது என்ற காரணம் பற்றி வந்தது ஆயுள் என்பது.

எனவே, ஆயுள் தூய தமிழ்க் காரணப் பெயர் என்றுணர்க.

### பசு

இதையும் வடசொல் என்றே நம்பி வருகின்றனர் படித்த தமிழரும், பசைதல் என்னும் சொல்லுக்கு அன்புறுதல், ஒட்டுதல், பொருளூட்ட முடைமை என்பனவெல்லாம் பொருள். பால் என்ற பொருளூட்ட முடையது பசு, பசை பண்புப் பெயர், அதன் முதனிலையாகிய பசு என்பதில் இறுதிநிலை. 'இ' புணர்ந்து கெட்டதென்க.

பசுவென்ற தமிழ்க் காரணப் பெயரை வந்தவர் எடுத்தாண்டனர். தட்டிக் கேட்க ஆள் இல்லாதபோது தம்பி! தடபுடல் செல்லுமன்றோ!

**- குயில், 24. 3.1959**